செய்தி வெளியீடு எண்: 305 நாள்: 30.05.2019

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
# ஜெ.ஜெ.நகர் கோட்டம்
## அறிவிப்பு

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு ஓர் நற்செய்தி

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, மாதாந்திர தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு ஐந்து மாதம் மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து, அரசு ஆணை (நிலை) எண்.104, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நி.எ.3(1)) துறை, நாள்.15.06.2017–ன் மூலம் அரசு ஆணை ஏற்கனவே வழங்கியுள்ளது. இச்சலுகை 21.02.2019 முதல் 31.03.2020 வரை மீண்டும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்கியுள்ளது.

அரசு அளித்துள்ள இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி ஜெ.ஜெ.நகர் கோட்ட திட்டங்களில் உள்ள தவணை முறையின் மூலம் மனை / வீடு / அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில் ஏற்கனவே முழுத்தொகையும் செலுத்தியவர்கள் நீங்கலாக, ஏனைய ஒதுக்கீடுதாரர்கள் மட்டும் ஜெ.ஜெ.நகர் கோட்ட அலுவலகத்தை அணுகி, வட்டி தள்ளுபடி போக மீதம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை, ஒரே தவணையில் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இச்சலுகை வரும் 31.03.2020–டன் முடிவடையவுள்ளதால்,ஜெ.ஜெ.நகர் கோட்டத்திற்குட்பட்ட அம்பத்தூர் திட்டம் பகுதி I&II, நொளாம்பூர் திட்டப்பகுதி, பழைய திருமுல்லைவாயில் திட்டப்பகுதி அடுக்குமாடி குடியிருப்புகள், முகப்பேர் ஏரி நிலவங்கி திட்டப்பகுதிகளில் விற்பனை பத்திரம் பெறாத ஒதுக்கீடுதாரர்கள் இத்திட்டத்தை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபபடுகிறது.

செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்
ஜெ.ஜெ.நகர் கோட்டம்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9